# உறவாடும் எழுத்துக்கள்

## - எந்தன் பேனாவோடு...

நவீன் ராஜ் தங்கவேல்

பகுதி - 1



# உறவாடும் எழுத்துக்கள்

- எந்தன் பேனாவோடு

~ பகுதி – 1 ~

நவீன் ராஜ் தங்கவேல்

# உறவாடும் எழுத்துக்கள்

***- எந்தன் பேனாவோடு....!***

*பேரன்புமிக்க வாசகர்களே, தங்களின் மேலான ஆதரவுக்கு என்றும் தலை வணங்குகிறேன். இதோ மேலும் ஒரு படைப்பு உங்களுக்காக உங்கள் கைகளில் நீங்கள் அளித்த தன்னம்பிக்கையின் பேரில்.*

*தமிழின்பால் நான் கொண்ட பற்று அளப்பரியது அதன் விளைவாக இந்த நூலை இத்தலைப்பின் கீழ் தேர்ந்தெடுத்து உள்ளேன். என் கவிகள் அனைத்தும், அது எழுதப்பட்ட சூழ்நிலையில் எந்தன் மனப்போக்கை பொருத்தே அமையப்பெற்றது. அத்தருணத்தில் தமிழோடு எந்தன் பேனா கொண்ட உறவே, இக்கவிகள்.*

*எண்ணங்களை தமிழ் மொழியின் வழியே வடித்துள்ளேன். சற்று படித்துப் பாருங்கள். நிறைவாய் இருப்பின் வாழ்த்துங்கள், வளருகிறேன். குறைகள் இருப்பின் திருத்துங்கள், கற்றுக்கொள்கிறேன். என் படைப்பு நிச்சயம் உங்களுக்கு பிடிக்கும் என்ற நம்பிக்கையில்....!*

***~ நவீன் ராஜ் தங்கவேல்***

## உறவாடும் எழுத்துக்கள் - ஆசிரியர் பற்றி

நான் நவீன் ராஜ் தங்கவேல், சேலம் மாவட்டம் ஆட்டையாம்பட்டி கிராமத்தை பூர்வீகமாய் கொண்டவன். இது எனது நான்காவது புத்தகம். எனது மூன்று புத்தகங்களுக்கும் உங்களின் அளப்பரியா ஆதரவை கண்டு உள மகிழ்கிறேன். எனது நான்காவது நூலுக்கும் தங்களது மேலான ஆதரவை எதிர்பார்கிறேன்.

**வகுப்பறைச் சாரல்கள்** – *http://freetamilebooks.com/ebooks/vagupparai-saralgal/*
**எழுதுகோலின் ஓவியம்** - *https://freetamilebooks.com/ebooks/ezhuthukolin-oviyam/*
**கடற்கரைச் சுவடுகள்** -
*https://freetamilebooks.com/ebooks/kadarkarai_suvadugal/*

கவிதைகள் எழுதுவது மட்டுமின்றி அதை கானொளியாகவும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்து வருகிறேன். அந்த அலைவரிசைக்கும் தங்களின் மேலான ஆதரவை வேண்டுகிறேன்.

**எங்கும் தமிழ்** –
*https://www.youtube.com/channel/UCJ71MmTbdtwTG8AzraXOZZA*

என்னை தொடர்பு கொள்ள – 8148266328
மின்னஞ்சல் அனுப்ப – naveenrajthangavel@gmail.com

## <u>காப்புரிமைத் தகவல்</u>

*Creative Commons Attribution-ShareAlike 4.0 International License*

நூலில் எந்த ஒரு மாறுதலும் செய்ய அனுமதியில்லை என்ற நிபந்தனையின் கீழ் பதிப்புரிமை வழங்கப்படுகிறது.

இதனை விலையில்லாமல் விநியோகிக்கவோ, அச்சிட்டு வெளியிடும் செலவினை ஈடுகட்டும் விதமாக கட்டணம் வசூலித்து விற்பனை செய்யவோ முழு உரிமை வழங்கப்படுகிறது.

*You are free: to Share — to copy, distribute and transmit the work; to*

*make commercial use of the work.*

***Under the following conditions:***

*Attribution — You must attribute the work in the manner specified by the author or licensor (but not in any way that suggests that they endorse you or your use of the work).*

*No Derivative Works — You may not alter, transform, or build upon this work.*

## **<u>சமர்ப்பணம்</u>**

*காகிதங்கள் தந்த மரங்களுக்கும்;*
*எழுதுகோல் தந்த உழைப்பாளிக்கும்;*
*மொழி தந்த தமிழுக்கும்;*
*கருத்துக்கள் தந்த சமூகத்திற்கும்;*

*ஊக்கம் தந்த நண்பர்களுக்கும்;*
*படைக்கும் ஆற்றல் தந்த இறைவனுக்கும்;*
*பிழைகள் திருத்தி தந்த கவிஞருக்கும்;*

*இத்தொகுப்பினை அன்பினால் சமர்ப்பிக்கிறேன்.....!*

## <u>தர்ம சாஸ்திரம்</u>

*தர்மன்*
*உரைக்கிறான்; சாஸ்திரத்தின் படி*
*எவ்வித ஆத்மாவும் பத்து தினங்களுக்கு மேல்*
*இப்புவிதனில் வாசம் செய்வதில்லை.....!*

*நீ மட்டும்*
*தர்மனிடம் வரமேதும் வாங்கிவிட்டாயோ....?*
*எம்மோடு பல ஆண்டுளாய் உடன் பயணிக்க.....!*

*உணர்வுகளால் மட்டுமே உணர்கிறேன்*
*உடனிருப்பது நீ என்று.... - உந்தன்*
*முகம் காண தவிக்கிறேன்;*
*வேண்டுவாயாக தர்மனிடம்.....!*

*எந்தன் வேண்டுதல் நிறைவேற்ற……!!!*

## கணம் - இறக்க தவிக்கிறேன்

கணம் உணர்கிறேனடி
அன்பே - என் கண்ணீரின்
கணம் உணர்கிறேனடி.....!

நீ இல்லா இத்தனை காலமும்
தனிமையை தவிர்த்திருந்தேன் - ஏனோ
உந்தன் நினைவுகள் வந்த தினம் முதலே
தனிமையை தேடுகிறேனடி.....!

உன் நிழலோடு உறவாட அல்ல;
எம் கண்ணீரின் கணத்தை இறக்கி வைக்க.....!!!

## <u>மடல்</u>

*திங்களை விரிக்கிறேன்*
*காகிதமாய்.....!*
*வான் மையினை தெளிக்கிறேன்*
*கவிதைகளாய்....!*
*அன்பே,*
*படித்துவிடு,*
*உனக்கான என் மடலை*
*எவரேனும் பார்க்கும் முன்னே.....!!!*

## அன்பான வேண்டுதல்

*ஆயிரம் கவலைகள் அனுதினமும்*
*அழுது புலம்பவே நினைக்கிறேன் - முடியவில்லை.....!*
*அன்பாய் பேசிடவும் அரவணைத்து*
*ஆறுதல் சொல்லிடவும் ஆளில்லை - உன்னைபோல்.....!*
*அன்னையிடம் கூறவே எண்ணம்*
*அமைதியாய் கடக்கிறேன் ஏதும் உறைக்காமல்.....!*
*அவள் கவலைகளோடு எம் கவலைகளையும்*
*அரவணைத்து மேலும் அவதியுறுவாள் - என்று.....!*
*ஆண்டவனிடம் வேண்டுகிறேன் என்னை*
*அன்பாய் அரவணைக்க என்னவள் வேண்டுமென்று.....!*
*அவதரித்துவிடு உன் உருகொண்டு - இல்லையேல்*
*அழித்துவிடு என்னையும் சேர்த்து.....!!!*

## **என் போதை**

இறைவனிடம் வரங்கள் கேட்டேன்
அவனோ தமிழை தந்துவிட்டான்....!
என் தனிமையை போக்க வேண்டியே.....!

ஒருவன்
மதுவில் உள்ளது
போதை என்றான்....!

மற்றொருவன்
மாதுவில் உள்ளது
போதை என்றான்....!

ஏனோ,
என் போதை - தமிழ்
கவிகளில் மட்டுமே.....!!!

## வேண்டும் சீர் வரிசை

*மாமன் இவன் கைப்பிடிக்க*
*மங்கையவள் உம்மிடத்தில் - என்*
*தங்கை எடுத்தளித்த*
*முகூர்த்தப் பட்டுடுத்தி*
*நால் வகைச் சீரோடு*
*கரம் பிடிக்க சம்மதித்தால்*

*மார்கழியில் சேதி சொல்லி*
*மாயவன் பதியினிடம் தந்தருளி*
*மாசியில் பரிசம் போட்டு*
*நான்முகன் பத்தினியின்-இடம் தந்திட்டு*
*சித்திரையில் கரம் பிடிப்பேன்;*
*உமையவள் சிவனில் கொண்ட - இடம்தனை*
*என்னில் உனதாக்கிடுவேன் - பெண்ணே*

*நித்திரையிலும் உன்னை விலகாது*
*என் வாழ்வனைத்தும் உடன் வருவேன் - அன்பே.....!!!*

## <u>மருந்தானேன்</u>

*உன் பிணியின் மருந்து*
*நான் என்றாய்.....!*
*ஏனோ,*
*மருந்து காலாவதி ஆகிவிட்டதோ*
*இல்லை,*
*உட்கொள்ள மறந்து விட்டாயோ....!*

*பிணியால் மாய்ந்து போய்விட்டாயே.....!!!*

## ஒரு தலைக் காதல்

*மீசை அரும்பிய தருணமது - என்*
*காதல் அரும்பிய தருணமும்தான்....!*
*தொலைவினில் உன்னை நோக்கியே*
*களிப்பாய் திரிந்தேனே*
*பத்தடியில் உனை கண்டேனே*
*பரவசத்தில் குதித்தேனே*
*அருகில் வந்து நின்றாயே*
*அமைதியை இழந்து தவித்தேனே.....!*

*அறிமுகம் கிடைக்க ஏங்கித்தான்*
*அணுஅணுவாய் சிதைந்தேனே.....!*
*இதயம் சிதைந்ததை அறிந்துத்தான்*
*என் உயிரூட்ட வருவாயோ;*
*இல்லை கருணைக் கொலை செய்வாயோ.....!*

*போதைக்கு அடிமையானேன் - உன்*
*விழிகொண்டு என்னை நோக்கியதால்*
*தெளியத் தெளிய ஏறுதடி*
*நீ பார்க்கும் நொடியெல்லாம்*
*உச்ச மயக்கம் என்னை மறந்தேன்*
*நீ வந்து எழுப்ப வேண்டியே.....!*

*ஒரு வார்த்தை பேசிடவே*
*ஆயிரம் வேண்டுதல் வைத்தேனே*
*ஒன்றோ இரண்டோ ஏற்றருளி*
*ஒரு வார்த்தை வீசிவிடு*
*இல்லையெனினும் கவலையில்லை*
*ஓரப் புன்னகை ஒதுக்கிவிடு*

*காலமெல்லாம் இது போதும் - நான்*
*உன் நினைவில் வாழ்ந்திடவே*
*வேறெதுவும் வேண்டாமே - ஒரு*
*தலைக் காதலும் சுகம்தானே……!!!*

# <u>காத்திருக்கிறேன்</u>

*மார்கழித் திங்கள்*
*மெல்லக் கரைந்து*
*தையும் உதயமாகிறது.....!*

*மாயவளே உனைக் காணும்*
*வழியும் மெல்ல விடிகிறது;*

*தையில் வழி கிடைக்கும்*
*உனைக் கண்டால் - என்*
*வாழ்வின் வழி கிடைக்கும்.....!*

*காத்திருக்கிறேன் என் வழியில் பயணிக்க.....!!!*

# <u>**மேகங்கள்**</u>

*அன்றொருநாள்,*
*நிலமிருந்து அண்ணாந்து இரசித்தேன்*
*கைபிடித்து கால் நனைத்து*
*விளையாட வேண்டியே.....!*

*சிகரத்தின் உச்சிதனில்*
*தோழமைகளின் களிப்புகளில்*
*மெய்மறந்து நான் இருக்க*
*கை பட்டு கால் தட்டு*
*எமை உரசி செல்கிறது*
*வந்தமர்ந்து எம்மோடு*
*விளையாட வேண்டுமென்று.....!!!*

## ஏரிக்கரையில்

*பத்து வருசம் இருக்கும்*
*இல்ல இல்ல*
*அதுக்கு மேலயும் இருக்கும்…*

*ஊளைக் காத்து வந்து*
*உறவாட நினைச்சதப்போ*
*மிதிவண்டி மிதிச்சிக்கிட்டு*
*பள்ளியை பத்தி பேசிக்கிட்டு*
*நண்பர்களோட ஊர் சுத்த*
*ஏரிக்கரை தாண்டயில*
*சத்த நேரம் கரையில உக்காந்து*
*பொழுத கழிச்சது*
*இன்னும் சுகமாத்தான் இருக்குது…..!*

*காசு பணம் சேர்க்க வேண்டி*
*எந்திரமா சுத்துரோமே…..*
*ஒரே நகரத்துல வேலை செஞ்சும்*
*அங்க ஒருத்தன் இங்க ஒருத்தன்*
*அப்ப ஒருத்தன் இப்ப ஒருத்தனு*
*பார்த்துக்கிட்டும் பேசிக்கிட்டும் இருந்தாலும்*
*மொத்தமா பாத்துக்கத்தான்*
*காலம் கூடிவரலயோ…..!*

*எவன் செஞ்ச புண்ணியமோ*
*மொத்த பயலும் ஒன்னாத்தான் கூடிவந்தோம்*
*புத்தாண்டு சுற்றுலானு…..!*

*வண்டியையும் புடுச்சிபுட்டோம்*
*சுற்றுலாவும் வந்துபுட்டோம்*

*பழங்கதையும் பேசிக்கிட்டோம்*
*இருந்தும் ஏதோ ஒன்னு*
*குறையா தான் இருக்குது.....!*

*இரண்டாம் நாள் சுத்த*
*ஏரிக்கரை சுத்தி வர*
*மிதிவண்டி எடுத்துக்கிட்டு*
*மொத்தமாதான் கௌம்புனோமே.....!*

*ஒன்னா போகையில*
*பனித்துளியும் சாரல் தூவ*
*மேகங்களும் துணைக்கு வர*
*குறையாக இருந்ததும்*
*இல்லைன்னு போயிடுச்சு.....!*

*அரைமணி நேர ஓட்டம் தான்*
*அங்கங்க நின்னுதான்*
*அஞ்சாறு புகைப்படமும்*
*அழகாத்தான் எடுத்துகிட்டோம்....!*
*ஐம்பது வருஷம் போனாலும்*
*அந்த நிமிசம் திரும்பத்தான்*
*கிடைக்குமுனு*
*உறுதியாத்தான் தெரியலயே.....!*

*கவலையேதும் இல்ல தான்*
*அடுத்த சந்திப்பு வரைக்கும்*
*இந்த நிகழ்வு போதுமே*
*நம்ம நட்ப புதுப்பிக்க.....!!!*

# <u>நெடுநாள் இச்சை</u>

*நெடுங் கனவு ஒன்று*
*நெடுநாள் துரத்துகிறது - எனில்*
*இதை கனவாய் எடுக்கவா.....?*
*இல்லை இலட்சியமாய் எடுக்கவா.....?*

*ஒன்றுபட்ட பாரதத்தின் வரலாற்றை*
*காலவரிசைப் படி*
*நாகரிகத்தின் தொடக்கம் முதல்*
*தற்காலம் வீழ்ச்சி வரை*
*கவி ஓவியமாய் செதுக்கவே எண்ணம்....!*

*இச்சை மிகவும்*
*சிறியது தான் எனினும்*
*அதன் செயல் வடிவம்*
*ஆழியில் முத்தெடுக்கும் வேலை.....!*

*வழியறியா தவிக்கிறேன்*
*துணை வேண்டி நிற்கிறேன்*
*தமிழே அருள் புரிவாய்.....!!!*

# <u>என் குலதெய்வம்</u>

*அரையடி உயரம் இருக்கும் - இல்லை*
*சற்று குறைவாகவும் இருக்கும்;*
*தலைப்பாகை அணிந்திருக்கும் - இல்லை*
*ஆமையின் குணமும் கொண்டிருக்கும்;*
*ஒற்றை வண்ணம் நிரம்பியிருக்கும் - இல்லை;*
*பல வண்ணங்களும் ஒருங்கிணைந்திருக்கும்;*
*ஆயுதம் போலிருக்கும் - இல்லை*
*அதனினும் வலிமையாய் இருக்கும்;*
*சாமானியனிடமும் இருக்கும் - இல்லை*
*கற்றோரிடம் சிறப்பு பெற்றிருக்கும்;*

*கற்றோரிடம் சிறப்பாய் இருக்கும் - இல்லை*
*கவிஞர்களிடம் தெய்வமாய் வீற்றிருக்கும்.....!!!*

## **<u>இதமான காலை நேரம்</u>**

*என் ஒவ்வொரு காலைப் பொழுதும்*
*கசப்போடே துவங்குகிறது.....*

*இளங் கசப்போடே....*

*விருப்பம் கொண்டே ஏற்கிறேன்*
*குளம்பியை....!!!*

## <u>**யுகம் யுகமாய்**</u>

*எழுதுகோலும் எழுத்தேடும்*
*எழுதும் வல்லமையும்*
*என் இனிய தமிழோடு*
*என் யுகம் யுகமாய் தொடர்தல் வேண்டும்.....!!!*

**<u>உன் நினைவுகள் தோன்றாத இடைவெளியில்</u>**

*உந்தன் நினைவுகள் தோன்றாத இடைவெளியில்*
*வாழவே எண்ணம் கொள்கிறேன்.....!*

*இருந்தும் முடியவில்லை;*

*சுற்றி இருக்கும் ஒவ்வொரு அசைவும்*
*உந்தன் நினைவுகளை மட்டுமே*
*தோன்ற வைக்கிறது.....!!!*

**<u>உயிர்ப்போடு இருக்க</u>**

*என்றும் என்னை நினைக்கும் நீயும்;*
*உந்தன் நினைவுகளும் போதும்*

*அனுதினமும்*
*நான் உயிர்ப்புடன் இருக்க.....!!!*

## உயிரின் உறைவிடம்

அகர
ஆகார
இகர
ஈகார
உகர
ஊகார
எகர
ஏகார
ஐகார
ஒகர
ஓகார
ஔகாரங்களுக்குள்
அடங்கியது தானே உயிர்.....!!!

# <u>பெண் குழந்தைகள் இல்லாமல் போனால்</u>

*அவனியில்,*
*அவதாரம் நிகழாது;*
*அதிசயமும் நடக்காது;*
*அமைதியும் தளைக்காது;*
*அறவழியும் பூக்காது.....!*

*எழுதுகோலும் ஓங்காது;*
*எண்ணமும் துளிர்க்காது;*
*எழுமையும் தோன்றாது;*
*ஏமாற்றம் இருக்காது.....!*

*இங்கு எதுவுமே இருக்காது;*
*இக்கேள்வியும் உதிக்காது.....!!!*

**அறிமுகமற்ற யாரோ ஒருவரின் புன்னகையில்**

*இது*
*நட்பின் தொடக்கமோ;*
*உறவின் பழக்கமோ;*
*சூழ்ச்சியின் துவக்கமோ;*
*பரிவின் பாகமோ.....!*

*யார் அறிவார்*
*இறைவனை அன்றி*

*பழகிடுவோம்*
*புன்னகைப் பகிர்ந்திடுவோம்*

*மனித நேயம் மலரட்டும்.....!!!*

## <u>ஊஞ்சல்</u>

*அச்சாரம் இடுகிறது வாழ்க்கை*
*அதில் ஊஞ்சலாடுகிறது வாழ்வு*

*முன்னும் பின்னுமாய்;*

*அது தானே வாழ்க்கை.....!*

*இதுவும் பிடிக்கிறது*
*முன்னும் பின்னும் மேலும் கீழும்*
*அழகாய் ஊஞ்சலாடுகிறது*
*வாழ்க்கையின் புரிதலோடு.....!!!*

## <u>**என்னுள் இருக்கும் ஒளி நீ**</u>

*வழி அறியா தவித்தவனை*
*காதல்,*
*ஒளி கொண்டு இயக்குகிறாய்.....*

*என்றும் எந்தன்*
*மனதில் இருந்த படியே....!!!*

## <u>தேடித் சலித்த தருணத்தில்</u>

*வாழ்க்கை எதுவென்று,*
*நித்தம் தேடித்தேடி சலிக்கிறேன்.....*

*இதுதான் வாழ்க்கை என்று*
*நான் சலிப்புறும் போதெல்லாம்*

*அழகாய் சிரிக்கிறது*
*'என் வாழ்க்கை'.....!!!*

## <u>கடந்து போக நினைக்கையில்</u>

*பங்குனிப் பகலில்*
*பள்ளிச் சாலையில்*
*பார்வை ஒன்றை வீசி*
*அவளை கடக்க நினைக்கையில்*

*என் மூளை*
*சண்டையிடுகிறது*
*இதயத்தோடு.....*

*அவள் விழியில் மாட்டாது*
*கடந்து போக வேண்டும் என்று.....!*

*இதயம் வெல்கிறது.....*
*மூளையை தோற்கடித்து அல்ல*
*என்னையே தோற்கடித்து....*

*எனில் என் இதயம் அவளல்லவா....!!!*

## **உறவாடும் நினைவுகளில்**

*அறிமுகமில்லா சந்திப்பு*
*தொடங்கி*
*கண்ணீருடன் கொண்ட பிரிவு*
*வரை*

*கொண்ட நினைவுகள் அனைத்தும்*
*உறவாடிக் கொண்டுதான் உள்ளது;*
*என்னோடு அனுதினமும்.....!*

*அழுத நாட்களை*
*எண்ணி சிரிக்கின்றேன்;*
*சிரித்த நாட்களை*
*எண்ணி அழுகிறேன்;*

*உன்னோடு உறவாட*
*உந்தன் நினைவுகள் போதும்*
*காலம் உள்ளவரை வாழ்ந்திடுவேன்*
*நிம்மதியாய்.....!!!*

## <u>மூடி வைத்த புத்தகத்தில்</u>

*மிச்சம் வைத்த பக்கங்களும்*
*என் பேனாவும்*
*அழகாய் உறங்குகிறது;*

*மீண்டும் நான்*
*வந்து எழுப்புவேன் என்ற*
*நம்பிக்கையில்.....!!!*

## <u>பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில்</u>

*பிறந்துவிட்டேன்*
*இப்புவியில் - ஆதலால்*

*வாழ்ந்தே ஆக வேண்டும்;*

*பிரிய நினைக்கிறேன்*
*இப்புவி விட்டு - முடியவில்லை*

*வாழ்ந்தே ஆக வேண்டும்;*

*இருக்கும் வரை*
*பணம் என்னும் காகிதம் விடுத்து*
*அன்பை செலவிடுவோம்*

*அழகாய் வாழ்ந்து விடுவோம்.... !!!*

# **அலைபேசியின் தொடுதிரையில்**

*எந்தன் சீண்டலின்*
*ஒவ்வொரு முறையும்*
*அழகாய் சிணுங்குகிறது....!*

*எம் தொடுதிரையில்*
*என்னவளின் பின்பம் இருப்பதால்.....!!!*

# <u>சிறகுகள் வலிப்பதில்லை</u>

*சுற்றித் திரியும் வயதுதான்*
*ஊர் ஊராய் சுற்றுகிறேன்....*

*பணியின் நிமித்தமாய்*
*பாசத்தின் பிணைப்பாய்*

*நல் எதிர்காலம் நோக்கிடவே*
*நகரம் நகரமாய் தாவுகிறேன்*

*சில நேரம் சந்தோசம்*
*பல நேரம் கவலைகளும்*
*எந்தன் இதயத்தை சூழ்ந்தாலும்;*

*எந்தன் சிறகுகள் என்றும்*
*வலிப்பதில்லை.....*

*ஆதலால்,*
*எந்தன் சிறகுகள் விரித்து*
*ஆகாயம் நோக்கிப் பறக்கிறேன்.....!!!*

## அகிம்சை

அகிம்சை
இது பெரும் இம்சை
காதலில்.....

மாயவள்
வருகைக்காக காத்திருக்கும்
இம்சையும் அகிம்சையே.....!

கன்னிகை
செவ்வாய் மொழிதல்
இம்சையும் அகிம்சையே.....!

அரிவை
அன்ன நடையின் வேகத்தின்
இம்சையும் அகிம்சையே.....!

பதுமை
விழி கொள்ளும் கோபத்தின்
இம்சையும் அகிம்சையே......!

இறுதியில்,
காதலும் அகிம்சையே.....!!!

# <u>உங்கள் படைப்புகளை வெளியிடலாமே</u>

*உங்கள் படைப்புகளை மின்னூலாக இங்கு வெளியிடலாம்.*

*1. எங்கள் திட்டம் பற்றி – http://freetamilebooks.com/about-the-project/*

*தமிழில் காணொளி – http://www.youtube.com/watch?v=Mu_OVA4qY8I*

*2. படைப்புகளை யாவரும் பகிரும் உரிமை தரும் கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம் பற்றி –*

*கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமை – ஒரு அறிமுகம்*
*http://www.kaniyam.com/introduction-to-creative-commons-licenses/*

*http://www.wired.co.uk/news/archive/2011-12/13/creative-commons-101*
*https://learn.canvas.net/courses/4/wiki/creative-commons-licenses*

*உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமத்தை இங்கே தேர்ந்தெடுக்கலாம்.*
*http://creativecommons.org/choose/*

*3. மேற்கண்டவற்றை பார்த்த / படித்த பின், உங்கள் படைப்புகளை மின்னூலாக மாற்ற*
*பின்வரும் தகவல்களை எங்களுக்கு அனுப்பவும்.*

1. *நூலின் பெயர்*
2. *நூல் அறிமுக உரை*
3. *நூல் ஆசிரியர் அறிமுக உரை*
4. *உங்கள் விருப்பான கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்*
5. *நூல் – text / html / LibreOffice odt/ MS office doc வடிவங்களில். அல்லது வலைப்பதிவு / இணைய தளங்களில் உள்ள கட்டுரைகளில் தொடுப்புகள் (url)*

*இவற்றை freetamilebooksteam@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.*

*விரைவில் மின்னூல் உருவாக்கி வெளியிடுவோம்.*

---

*நீங்களும் மின்னூல் உருவாக்கிட உதவலாம்.*

*மின்னூல் எப்படி உருவாக்குகிறோம்? –*

*தமிழில் காணொளி – https://www.youtube.com/watch?v=bXNBwGUDhRs*

*இதன் உரை வடிவம் ஆங்கிலத்தில் – http://bit.ly/create-ebook*

*எங்கள் மின்னஞ்சல் குழுவில் இணைந்து உதவலாம்.*
*https://groups.google.com/forum/#!forum/freetamilebooks*

*Free Tamil Ebooks - எங்களைப் பற்றி*

***மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்:***

*மின்புத்தகங்களைப் படிப்பதற்கென்றே கையிலேயே வைத்துக் கொள்ளக்கூடிய பல கருவிகள் தற்போது சந்தையில் வந்துவிட்டன. Kindle, Nook, Android Tablets போன்றவை இவற்றில் பெரும்பங்கு வகிக்கின்றன. இத்தகைய கருவிகளின் மதிப்பு தற்போது 4000 முதல் 6000 ரூபாய் வரை குறைந்துள்ளன. எனவே பெரும்பான்மையான மக்கள் தற்போது இதனை வாங்கி வருகின்றனர்.*

***ஆங்கிலத்திலுள்ள மின்புத்தகங்கள்:***

*ஆங்கிலத்தில் லட்சக்கணக்கான மின்புத்தகங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன. அவை PDF, EPUB, MOBI, AZW3. போன்ற வடிவங்களில் இருப்பதால், அவற்றை மேற்கூறிய கருவிகளைக் கொண்டு நாம் படித்துவிடலாம்.*

***தமிழிலுள்ள மின்புத்தகங்கள்:***

*தமிழில் சமீபத்திய புத்தகங்களெல்லாம் நமக்கு மின்புத்தகங்களாக கிடைக்கப்பெறுவதில்லை. ProjectMadurai.com எனும் குழு தமிழில் மின்புத்தகங்களை வெளியிடுவதற்கான ஓர் உன்னத சேவையில் ஈடுபட்டுள்ளது. இந்தக் குழு இதுவரை வழங்கியுள்ள தமிழ் மின்புத்தகங்கள் அனைத்தும் PublicDomain-ல் உள்ளன. ஆனால் இவை மிகவும் பழைய புத்தகங்கள்.*

*சமீபத்திய புத்தகங்கள் ஏதும் இங்கு கிடைக்கப்பெறுவதில்லை.*

*எனவே ஒரு தமிழ் வாசகர் மேற்கூறிய "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகளை" வாங்கும்போது, அவரால் எந்த ஒரு தமிழ் புத்தகத்தையும் இலவசமாகப் பெற முடியாது.*

***சமீபத்திய புத்தகங்களை தமிழில் பெறுவது எப்படி?***

*சமீபகாலமாக பல்வேறு எழுத்தாளர்களும், பதிவர்களும், சமீபத்திய நிகழ்வுகளைப் பற்றிய விவரங்களைத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளனர். அவை இலக்கியம், விளையாட்டு, கலாச்சாரம், உணவு, சினிமா, அரசியல், புகைப்படக்கலை, வணிகம் மற்றும்*

*தகவல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு தலைப்புகளின் கீழ் அமைகின்றன.*

*நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து தமிழ் மின்புத்தகங்களை உருவாக்க உள்ளோம்.*

*அவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள் Creative Commons எனும் உரிமத்தின் கீழ் வெளியிடப்படும். இவ்வாறு வெளியிடுவதன் மூலம் அந்தப் புத்தகத்தை எழுதிய மூல ஆசிரியருக்கான உரிமைகள் சட்டரீதியாகப் பாதுகாக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அந்த மின்புத்தகங்களை யார் வேண்டுமானாலும், யாருக்கு வேண்டுமானாலும், இலவசமாக வழங்கலாம்.*

*எனவே தமிழ் படிக்கும் வாசகர்கள் ஆயிரக்கணக்கில் சமீபத்திய தமிழ் மின்புத்தகங்களை இலவசமாகவே பெற்றுக் கொள்ள முடியும்.*

***தமிழிலிருக்கும் எந்த வலைப்பதிவிலிருந்து வேண்டுமானாலும் பதிவுகளை எடுக்கலாமா?***

*கூடாது.*

*ஒவ்வொரு வலைப்பதிவும் அதற்கென்றே ஒருசில அனுமதிகளைப் பெற்றிருக்கும். ஒரு வலைப்பதிவின் ஆசிரியர் அவரது பதிப்புகளை "யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்" என்று குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அதனை நாம் பயன்படுத்த முடியும்.*

*அதாவது "Creative Commons" எனும் உரிமத்தின் கீழ் வரும் பதிப்புகளை மட்டுமே நாம் பயன்படுத்த முடியும்.*

*அப்படி இல்லாமல் "All Rights Reserved" எனும் உரிமத்தின் கீழ் இருக்கும் பதிப்புகளை நம்மால் பயன்படுத்த முடியாது.*

*வேண்டுமானால் "All Rights Reserved" என்று விளங்கும் வலைப்பதிவுகளைக் கொண்டிருக்கும் ஆசிரியருக்கு அவரது பதிப்புகளை "Creative Commons" உரிமத்தின் கீழ் வெளியிடக்கோரி நாம் நமது வேண்டுகோளைத் தெரிவிக்கலாம். மேலும் அவரது படைப்புகள் அனைத்தும் அவருடைய பெயரின் கீழே தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் நாம் அளிக்க வேண்டும்.*

*பொதுவாக புதுப்புது பதிவுகளை உருவாக்குவோருக்கு அவர்களது பதிவுகள் நிறைய வாசகர்களைச் சென்றடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். நாம் அவர்களது படைப்புகளை எடுத்து இலவச மின்புத்தகங்களாக வழங்குவதற்கு நமக்கு அவர்கள் அனுமதியளித்தால், உண்மையாகவே அவர்களது படைப்புகள் பெரும்பான்மையான மக்களைச் சென்றடையும். வாசகர்களுக்கும் நிறைய புத்தகங்கள் படிப்பதற்குக் கிடைக்கும்*

*வாசகர்கள் ஆசிரியர்களின் வலைப்பதிவு முகவரிகளில் கூட அவர்களுடைய படைப்புகளை தேடிக் கண்டுபிடித்து படிக்கலாம். ஆனால் நாங்கள் வாசகர்களின் சிரமத்தைக் குறைக்கும் வண்ணம் ஆசிரியர்களின் சிதறிய வலைப்பதிவுகளை ஒன்றாக இணைத்து ஒரு முழு மின்புத்தகங்களாக உருவாக்கும் வேலையைச் செய்கிறோம். மேலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட புத்தகங்களை "மின்புத்தகங்களைப் படிக்க உதவும் கருவிகள்"-க்கு ஏற்ற வண்ணம் வடிவமைக்கும் வேலையையும் செய்கிறோம்.*

***FreeTamilEbooks.com***

*இந்த வலைத்தளத்தில்தான் பின்வரும் வடிவமைப்பில் மின்புத்தகங்கள் காணப்படும்.*

*PDF for desktop, PDF for 6" devices, EPUB, AZW3, ODT*

*இந்த வலைதளத்திலிருந்து யார் வேண்டுமானாலும் மின்புத்தகங்களை இலவசமாகப் பதிவிறக்கம்(download) செய்து கொள்ளலாம்.*

*அவ்வாறு பதிவிறக்கம்(download) செய்யப்பட்ட புத்தகங்களை யாருக்கு வேண்டுமானாலும் இலவசமாக வழங்கலாம்.*

***இதில் நீங்கள் பங்களிக்க விரும்புகிறீர்களா?***

*நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தமிழில் எழுதப்பட்டிருக்கும் வலைப்பதிவுகளிலிருந்து பதிவுகளை எடுத்து, அவற்றை LibreOffice/MS Office போன்ற wordprocessor-ல் போட்டு ஓர் எளிய மின்புத்தகமாக மாற்றி எங்களுக்கு அனுப்பவும்.*

*அவ்வளவுதான்!*

*மேலும் சில பங்களிப்புகள் பின்வருமாறு:*

1. *ஒருசில பதிவர்கள்/எழுத்தாளர்களுக்கு அவர்களது படைப்புகளை "Creative Commons" உரிமத்தின்கீழ் வெளியிடக்கோரி மின்னஞ்சல் அனுப்புதல்*
2. *தன்னார்வலர்களால் அனுப்பப்பட்ட மின்புத்தகங்களின் உரிமைகளையும் தரத்தையும் பரிசோதித்தல்*
3. *சோதனைகள் முடிந்து அனுமதி வழங்கப்பட்ட தரமான மின்புத்தகங்களை நமது வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல்*

*விருப்பமுள்ளவர்கள் freetamilebooksteam@gmail.com எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.*

### *இந்தத் திட்டத்தின் மூலம் பணம் சம்பாதிப்பவர்கள் யார்?*

*யாருமில்லை.*

*இந்த வலைத்தளம் முழுக்க தன்னார்வலர்களால் செயல்படுகின்ற ஒரு வலைத்தளம் ஆகும். இதன் ஒரே நோக்கம் என்னவெனில் தமிழில் நிறைய மின்புத்தகங்களை உருவாக்குவதும், அவற்றை இலவசமாக பயனர்களுக்கு வழங்குவதுமே ஆகும்.*

*மேலும் இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்கள், ebook reader ஏற்றுக்கொள்ளும் வடிவமைப்பில் அமையும்.*

### *இத்திட்டத்தால் பதிப்புகளை எழுதிக்கொடுக்கும் ஆசிரியர்/பதிவருக்கு என்ன லாபம்?*

*ஆசிரியர்/பதிவர்கள் இத்திட்டத்தின் மூலம் எந்தவிதமான தொகையும் பெறப்போவதில்லை. ஏனெனில், அவர்கள் புதிதாக இதற்கென்று எந்தஒரு பதிவையும் எழுதித்தரப்போவதில்லை.*

*ஏற்கனவே அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கும் பதிவுகளை எடுத்துத்தான் நாம் மின்புத்தகமாக வெளியிடப்போகிறோம்.*

*அதாவது அவரவர்களின் வலைதளத்தில் இந்தப் பதிவுகள் அனைத்தும் இலவசமாகவே கிடைக்கப்பெற்றாலும், அவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ebook reader போன்ற கருவிகளில் படிக்கும் விதத்தில் மாற்றித் தரும் வேலையை இந்தத் திட்டம் செய்கிறது.*

*தற்போது மக்கள் பெரிய அளவில் tablets மற்றும் ebook readers போன்ற கருவிகளை நாடிச் செல்வதால் அவர்களை நெருங்குவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.*

***நகல் எடுப்பதை அனுமதிக்கும் வலைதளங்கள் ஏதேனும் தமிழில் உள்ளதா?***

*உள்ளது.*

*பின்வரும் தமிழில் உள்ள வலைதளங்கள் நகல் எடுப்பதினை அனுமதிக்கின்றன.*

1. *[www.vinavu.com](http://www.vinavu.com)*

2. *[www.badriseshadri.in](http://www.badriseshadri.in)*

3. *[http://maattru.com](http://maattru.com)*

4. *[kaniyam.com](http://kaniyam.com)*

5. *[blog.ravidreams.net](http://blog.ravidreams.net)*

***எவ்வாறு ஒர் எழுத்தாளரிடம் Creative Commons உரிமத்தின் கீழ் அவரது படைப்புகளை வெளியிடுமாறு கூறுவது?***

*இதற்கு பின்வருமாறு ஒரு மின்னஞ்சலை அனுப்ப வேண்டும்.*

*<துவக்கம்>*

*உங்களது வலைத்தளம் அருமை [வலைதளத்தின் பெயர்].*

*தற்போது படிப்பதற்கு உபயோகப்படும் கருவிகளாக Mobiles மற்றும் பல்வேறு கையிருப்புக் கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வந்துள்ளது.*

*இந்நிலையில் நாங்கள் [http://www.FreeTamilEbooks.com](http://www.FreeTamilEbooks.com) எனும் வலைதளத்தில், பல்வேறு தமிழ் மின்புத்தகங்களை வெவ்வேறு துறைகளின் கீழ் சேகரிப்பதற்கான ஒரு புதிய திட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.*

*இங்கு சேகரிக்கப்படும் மின்புத்தகங்கள் பல்வேறு கணிணிக் கருவிகளான Desktop, ebook readers like kindle, nook, mobiles, tablets with android, iOS போன்றவற்றில் படிக்கும் வண்ணம் அமையும்.*

அதாவது இத்தகைய கருவிகள் *support* செய்யும் *odt, pdf, ebub, azw* போன்ற வடிவமைப்பில் புத்தகங்கள் அமையும்.

இதற்காக நாங்கள் உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பெற விரும்புகிறோம். இதன் மூலம் உங்களது பதிவுகள் உலகளவில் இருக்கும் வாசகர்களின் கருவிகளை நேரடியாகச் சென்றடையும்.

எனவே உங்களது வலைதளத்திலிருந்து பதிவுகளை பிரதியெடுப்பதற்கும் அவற்றை மின்புத்தகங்களாக மாற்றுவதற்கும் உங்களது அனுமதியை வேண்டுகிறோம்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட மின்புத்தகங்களில் கண்டிப்பாக ஆசிரியராக உங்களின் பெயரும் மற்றும் உங்களது வலைதள முகவரியும் இடம்பெறும். மேலும் இவை *"Creative Commons"* உரிமத்தின் கீழ் மட்டும்தான் வெளியிடப்படும் எனும் உறுதியையும் அளிக்கிறோம்.

*http://creativecommons.org/licenses/*

நீங்கள் எங்களை பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளலாம்.

*e-mail : **freetamilebooksteam@gmail.com***
*FB : https://www.facebook.com/FreeTamilEbooks*

*G +: https://plus.google.com/communities/108817760492177970948*

நன்றி.

</முடிவு>

மேற்கூறியவாறு ஒரு மின்னஞ்சலை உங்களுக்குத் தெரிந்த அனைத்து எழுத்தாளர்களுக்கும் அனுப்பி அவர்களிடமிருந்து அனுமதியைப் பெறுங்கள்.

முடிந்தால் அவர்களையும் *"Creative Commons License"*-ஐ அவர்களுடைய வலைதளத்தில் பயன்படுத்தச் சொல்லுங்கள்.

கடைசியாக அவர்கள் உங்களுக்கு அனுமதி அளித்து அனுப்பியிருக்கும்

மின்னஞ்சலை*freetamilebooksteam@gmail.com* எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஓர் எழுத்தாளர் உங்களது வேண்டுகோளை மறுக்கும் பட்சத்தில் என்ன செய்வது?**

அவர்களையும் அவர்களது படைப்புகளையும் அப்படியே விட்டுவிட வேண்டும்.

ஒருசிலருக்கு அவர்களுடைய சொந்த முயற்சியில் மின்புத்தகம் தயாரிக்கும் எண்ணம்கூட இருக்கும். ஆகவே அவர்களை நாம் மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்யக் கூடாது.

அவர்களை அப்படியே விட்டுவிட்டு அடுத்தடுத்த எழுத்தாளர்களை நோக்கி நமது முயற்சியைத் தொடர வேண்டும்.

**மின்புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும்?**

ஒவ்வொருவரது வலைத்தளத்திலும் குறைந்தபட்சம் நூற்றுக்கணக்கில் பதிவுகள் காணப்படும். அவை வகைப்படுத்தப்பட்டோ அல்லது வகைப்படுத்தப் படாமலோ இருக்கும்.

நாம் அவற்றையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ஒரு பொதுவான தலைப்பின்கீழ் வகைப்படுத்தி மின்புத்தகங்களாகத் தயாரிக்கலாம். அவ்வாறு வகைப்படுத்தப்படும் மின்புத்தகங்களை பகுதி-I பகுதி-II என்றும் கூட தனித்தனியே பிரித்துக் கொடுக்கலாம்.

**தவிர்க்க வேண்டியவைகள் யாவை?**

இனம், பாலியல் மற்றும் வன்முறை போன்றவற்றைத் தூண்டும் வகையான பதிவுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

**எங்களைத் தொடர்பு கொள்வது எப்படி?**

நீங்கள் பின்வரும் முகவரிகளில் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

- ***email:*** ***freetamilebooksteam@gmail.com***
- *Facebook: https://www.facebook.com/FreeTamilEbooks*
- *Google Plus: https://plus.google.com/communities/108817760492177970948*

## இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்?

குழு – *http://freetamilebooks.com/meet-the-team/*

***Supported by***

- *Free Software Foundation TamilNadu, www.fsftn.org*
- *Yavarukkum Software Foundation http://www.yavarkkum.org/*